**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**

**SINGAMPUNARI**

**C.C. No.20 /2025 PW .2**

| | |
|---|---|
| பெயர் : அஜீத் | தந்தை/கணவர் பெயர்: ஆண்டிச்சாமி |
| ஊர் : | தாலுகா : |
| வயது : | தொழில் : |
| ஜாதி : | சமயம் : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.01.2026

**(1,2 எதிரிகள் ஆஜர் )**

**29.01.2026 முதல் விசாரணை:**

**1.** நான் சிங்கம்புணரியில் குடியிருந்து ஜெசிபி ஓட்டுனராக இருந்தேன். தற்போது எனக்கு இந்த வழக்கு சம்பவத்தில் காயங்கள் ஏற்பட்டதால் ஓட்ட முடியவில்லை. அசா.1 எனது அம்மா ஆவார். ஆஜர் எதிரிகள் இருவரும் எனது நண்பர்கள் ஆவார்கள். நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். சுமார் 6 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் மணப்பட்டி காளவாசல் அருகே இரவு சுமார் 7,8 மணியளவில் அமர்ந்திருந்தேன். அப்போது அங்கு வந்த எதிரிகளில் 1வது எதிரி சூரி கத்தி வைத்து என்னை குத்தினார். 2வது எதிரி என்னை கையை பிடித்து கொண்டார். 1வது எதிரி குத்தியதில் எனக்கு முதுகில் ஒரு குத்து காயமும், வலது காலில் வெட்டியதில் ஒரு வெட்டு காயமும் ஏற்பட்டது. நான் உடனே மயங்கி விழுந்து விட்டேன்.

2. என்னுடைய சித்தப்பா மகன் குமார் சம்பவ இடத்தில் இருந்ததால் அவர் என்னை சிங்கம்புணரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். பின்னர் என்னை மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு எனக்கு அறுவைசிகிச்சை செய்தார்கள். சுமார் 2 மாதங்கள் நான் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன்.

3.சம்பவத்திற்கு முன் சுமார் 1 வருடத்திற்கு முன்னர் எனக்கும் 1வது எதிரிக்கும் சண்டை ஏற்பட்டது. அதனால் முன்விரோதம் கொண்ட 1வது எதிரி 2வது எதிரியுடன் சேர்ந்து என்னை குத்தினார். 1வது எதிரி என்னை குத்திய கத்தியை என்னால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் அடையாளம் காட்ட முடியாது. நான் மயங்கிய நிலையில் இருந்ததால் போலீசார் விசாரித்தார்களா என்று தெரியவில்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை